IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.221/2021
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.50PM.

வா.சா. 1 சாட்சி சோனியாகாந்தி த.பெ.சேகர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 20.09.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எந்த வருடத்திலிருந்து மறவன்குளத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்ததில் இருந்து குடியிருந்து வருகிறேன். எனது தாயார் பெயர் இலட்சுமி ஆகும். எனது தந்தை தாவா வழக்கில் 1ம்பிரதிவாதி என்றால் சரிதான். எனது தந்தை திருமங்கலத்தில் பொற்காலநகரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதியும், எனது தாயும் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் எனக்கு விபரம் தெரிந்த நாள்முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். பிரிந்து வாழ்ந்து வருவதற்கான காரணம் தெரியுமா என்றால் தெரியாது.

2. எனது தந்தை என் வீட்டிற்கு வந்து என்னை பார்ப்பாரா என்றால் இல்லை. வெளியில் செல்லும்போது மட்டும் பார்ப்பார் ஆனால் பேசமாட்டார். தாவா வழக்கில் கட்டுப்பட்ட சொத்தை எனது தந்தை அவரது சகோதரி நிர்மலாவிற்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் வழக்குச் சொத்து எனது தாத்தா சொத்து என்பதால் அதில் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன்.

3. எனது தந்தை 3ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அம்மாபட்டி ஆகும். வழக்குச்சொத்தின் விஸ்தீரணம் 63 செண்டு என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் சர்வே எண் 24/2A ஆகும்.

4. மேற்படி சர்வே எண் 24/2Aல் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 63 செண்டு ஆகும். மேற்படி சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் எனது தாத்தாவின் தந்தை கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி கோவிந்தசாமிக்கு வழக்குச் சொத்து கிரையப்பாத்தியமா, பூர்வீக பாத்தியமா என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5. வழக்குச் சொத்து ஆதியில் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்பதைக் காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. வழக்குச் சொத்தை கோவிந்தசாமி 18.4.1943ல் கிரையம் வாங்கியதாக எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

6. எதிர்வழக்குரையில் மேற்படி கோவிந்தசாமிக்கு வழக்குச் சொத்து எப்படிப்பாத்தியம் என்று கூறியுள்ளார்களா என்றால் ஞாபகம்இல்லை. வழக்குச் சொத்தை 18.4.1943ல் மேற்படி கோவிந்தசாமி கிரையம் வாங்கியதாக எதிர்வழக்குரையில் கூறிய விபரம் தெரிந்தும் வழக்கிற்காக ஞாபம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையை மறுத்து நான் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. கோவிந்தசாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் தேவராஜ், கோபாலகிருஷ்ணன் ஆகிய இரண்டு பேர் ஆவார்கள். மேற்படி கோவிந்தசாமி இறந்து 40 – 50 வருடங்களுக்கு மேல் ஆகும் என்றால் அவர் இறந்தபோது நான் பிறக்கவில்லை. அவர் இறந்தபிறகு அவரது பிள்ளைகள் இருவரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

8. மேற்படி பாகப்பிரிவினையில் 1ஏக்கர் 26 செண்டு கோபாலகிருஷ்ணன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது வழக்குரையில் தேவராஜ் மற்றும் கோபாலகிருஷ்ணன் வழக்குச் சொத்தை கனரா வங்கியில் அடமானம் வைத்ததாக கூறப்பட்டுள்ளதன்படி மேற்படி விபரத்தை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

9. மேற்படி அடமானத்தை எப்போது மீட்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி 1 ஏக்கர் 26 செண்டில் வழக்குச் சொத்தானது தென்புறம் 63 செண்டு என்றால் சரிதான். மேற்படி 63 செண்டிற்கு நான்குமால் வடக்கே 2ம்பிரதிவாதியின் இடமும், கிழக்கே சர்வே எண் 24/2B, மேற்கே தென்வடல் ஓடையும், தெற்கே கிழமேல் ஓடையும் உள்ளது.

10. மேற்படி நான்குமால் விபரத்தை வழக்குச் சொத்து விபரத்தில் குறிப்பிட்டுசொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விபரத்தை வழக்குரையில் குறிப்பிடாமல் குறிப்பிட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து புலஎண்ணில் கண்ட

1ஏக்கர் 26 செண்டும் ஆதியில் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

11. வழக்குச் சொத்து கோவிந்தசாமிக்கு பூர்வீக பாதியமா, கிரையப்பாத்தியமா என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்கோளுக்கிணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.25 P.M.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.20 17:29:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.